அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - நோர்வே
அன்னைத் தமிழ்முற்றப் போட்டி 2026

பேச்சு 2019 ஆம் ஆண்டு பிறந்த மாணவர்கள்

வளாகங்களில் முதல் மூன்று நிலைகளையும் அடைந்த மாணவர்கள் அன்னைத் தமிழ்முற்றப் போட்டியில் பங்குபெறும் வாய்ப்பைப் பெறுவார்கள்.

# "எனது பெற்றோர்"

**எனது அம்மா, எனது அப்பா இவர்கள்தான் எனது உலகம். நான் படிக்கும் ஒவ்வொரு எழுத்தும், நான் பார்க்கும் ஒவ்வொரு பொருளும், நான் கேட்கும் ஒவ்வொரு கதையும் அவர்கள் கற்றுக் கொடுத்தவை.**

**எனது அம்மா அன்பின் வடிவம். நான் அழுதால், உடனே என்னைத் தேற்றுவார். எனது வீட்டுப் பாடங்களைச் செய்ய எனக்கு உதவி செய்வார். அப்பா மாலையில் என்னுடன் விளையாடுவார். எனக்கு புதிய விடயங்களைக் கற்றுத் தருகிறார்.**

**அப்பாவும், அம்மாவும் எனது இரண்டு கண்கள். அவர்கள் தான் எனது வழிகாட்டிகள்! எனது பெற்றோர் இருவரும் என்னை மிகவும் நேசிக்கின்றார்கள். சின்னச் சின்ன தவறுகளை மன்னித்து அன்பாகப் பேசுவார்கள். என்னை நல்ல பிள்ளையாக வளர்க்கிறார்கள்.**

**அவர்களுடைய பாசம் தான் என் வாழ்க்கையின் பலம். நான் என் அப்பாவிற்கும், அம்மாவிற்கும் எப்போதும் நன்றியாக இருப்பேன்.**

**நன்றி.**

**வணக்கம்.**

அனைத்து மாணவர்களுக்கும் இப்பிரதி வழங்கப்படுகிறது.
அனைத்து மாணவர்களையும் ஊக்கப்படுத்துவது ஆசிரியர் கடமை.
மாணவர்களை தயார்படுத்துவது பெற்றோரின் கடமை.